பத்திரிக்கை செய்தி

தந்தை பெயரில் வீட்டு ஆவணத்தை பெயர் மாற்றம் செய்ய லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய கிராம நிர்வாக அதிகாரிக்கு 3 ஆண்டுகள் சிறை

புகார்தாரர் திரு.தேக்கமலை, திருச்சி மாவட்டம் அவர்கள் தன்னுடைய தந்தை பெயரில் வீட்டு கடன் பெறுவதற்கு வீட்டு ஆவணத்தை பெயர் மாற்றம் செய்ய திருச்சி மாவட்டம், நடுப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.ராமரத்தினம், கிராம நிர்வாக அலுவலர், நடுப்பட்டி கிராமம், திருச்சி மாவட்டம், அவர்கள் தனக்கு ரூ.1,500/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 11.12.2008 மேற்கொள்ளப்பட்டு திரு.ராமரத்தினம், கிராம நிர்வாக அலுவலர் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.1,500/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது சிறப்பு நீதிமன்றம், திருச்சி நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் 31.10.2025 திரு.ராமரத்தினம், கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.